(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2024

| மனைப்பொருளியல் Home Economics | Three Hours 10 Min / Gr. 12 (2024) | 28 | T | I,II |
|---|---|---|---|---|

### பகுதி I

❖ *1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு (1), (2), (3), (4), (5) என வழங்கப்பட்ட விடைகளில்* **மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதற்குரிய கூட்டினுள் (X) புள்ளடி இடுக.**

01) சூழல்சார் வடிவமைப்பின் போது, வீட்டில் அளவும் வடிவமும் காணியின் அளவுடன் பொருத்தியமைதல் என்பது,
(1) பெறுமானத்தொகுதி (2) அளவும் விகிதசமமும் (3) கலைத்துவம்
(4) பொருத்தப்பாடு (5) காலவெளியை தீர்மானித்தல்

02) வர்ணத்தின் இளம் அல்லது கடும் தன்மையால் கருதப்படுவது,
(1) பெறுமானம் (2) செறிவு (3) சாயல் (4) வர்ணம் (5) நிறம்

03) தற்கால கட்டட அமைப்பில் பசுமைக்கட்டட அமைப்பு மிக முக்கியமானது. அதன் அனுகூலத்தில் **அடங்காதது.**
(1) காபன் விடுவிப்பு (2) நீர்பயன்பாடு
(3) சூழலுக்கு காபனீரொட்சைட் அதிகரிப்பு (4) சக்தி நுகர்வு
(5) திண்ம கழிவு குறைவு

04) நிர்மாணிப்புக்காகப் பயன்படுத்திய நிலத்தின் அமைவிடம், வடிவம், மண்வகை, தாவர குடித்தொகை பற்றி விபரிப்பது,
(1) எண்ணக்கரு (2) சூழமைவு (3) பேரினச்சூழமைவு
(4) நுண்பௌதீகச் சூழமைவு (5) பொருளாதாரச் சூழல்

05) வெவ்வேறு துணைக்கூறுகளிலும் யாதேனுமொரு இணக்கத்தை சேர்ப்பது,
(1) விகிதசமம் (2) ஒன்றிணைவு (3) உறுத்தல் (4) சந்தம் (5) ஒருமைப்பாடு

06) தேசிய அரும்பொருட் காட்சியகம் அமைந்த மரபு ரீதியான பாங்கு.
(1) ஐரோப்பிய மரபு (2) சுதேச மரபு (3) பண்டைய மரபு
(4) சூழல் நேயம் (5) பசுமை கட்டட அமைப்பு

07) ஐதரோக்காபன் சங்கிலியில் ஒற்றைப்பிணைப்பை மாத்திரம் கொண்ட கொழுப்பமிலம்.
(1) கொழுப்பமிலம் (2) நிரம்பிய கொழுப்பமிலம்
(3) நிரம்பாகொழுப்பமிலம் (4) தனிநிரம்பா கொழுப்பமிலம்
(5) பல்நிரம்பா கொழுப்பமிலம்

08) மனிதனிலும், விலங்கிலும் மாப்பொருள் எவ்வாற சேமிக்கப்படும்.
(1) செலுலோசு (2) கொழுப்பு (3) கிளைக்கோசன்
(4) குளுக்கோசு (5) அமினோ அமிலம்

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

09) அத்தியாவசியமற்ற அமினோ அமிலம் **அல்லாதது,**
(1) அலனின் (2) செரீன் (3) கிளைசீன் (4) வலீன் (5) சிற்றீன்

10) விலங்கு மூல உணவைக் கொண்ட விற்றமின்.
(1) விற்றமின் B1 (2) விற்றமின் B3 (3) விற்றமின் B6
(4) விற்றமின் B9 (5) விற்றமின் B12

11) இலிப்பிட்டு வகையினால் ஆன ஓமோன்.
(1) செரின் (2) கிளைசீன் (3) கோட்டிசோன் (4) அக்கின் (5) மயோசின்

12) முட்டை வெண்கருவை நீருடன் கலந்து அதனுடன் எப்பொருளை கலந்து, ஊதா நிற வீழ்படிவை பெறப்படுகிறது.
(1) ஒட்சன், காபனீரொட்சைட் (2) கல்சியம் குளோரைட், பொற்றாசியம்
(3) குளோரைட்டு, சல்பைட்டு (4) மக்னீசியம், செப்புசல்பேற்
(5) பொற்றாசியம் ஐதரொட்சைட், செப்புசல்பேற்று கரைசல்

13) மஞ்சள் நிற வற்றாளை, சேப்பங்கிழங்கு, மஞ்சள் நிற மரவள்ளியில் அதிகம் காணப்படும் விற்றமின.
(1) அஸ்கோபிக்கமிலம் (2) ரெட்டினோல் (3) கோலிகல்சிபெரோஸ்
(4) கரோட்டின் (5) சயனோகோபலமின்

14) இரைப்பைச் சாற்றில் காணப்படும் எந் நொதியம், இரைப்பைச் சாற்றில் இரசாயனப் பதார்த்தத்தால் ஏற்படும் சேதத்தை குறைக்க உதவும்.
(1) சீதம் (2) பித்தச்சாறு (3) சதையச்சாறு (4) ஈரல் (5) உமிழ்நீர்

15) திரிச்சின் நொதிய சுரப்பை நிரோதிக்கும் இரசாயனப் பொருட் அடங்கிய உணவு.
(1) அரிசி, கடலை (2) சோயா அவரை, போஞ்சி
(3) சோளம், குரக்கன் (4) திணை, பருப்பு
(5) கச்சான், பயறு

16) இலங்கையில் நிறைகுறைவான குழந்தைகள் பிறக்கும் மாவட்டம்.
(1) பதுளை (2) திருகோணமலை (3) மட்டக்களப்பு
(4) நுவரெலியா (5) யாழ்ப்பாணம்

17) உக்கிர குறையூட்ட நிலையின் இயல்பு **அல்லாதது.**
(1) உடல் அனுசேபவீதம் குறைதல்
(2) இழையங்கள் தேய்வுறுதல்
(3) தசைகள் தேய்வுறல்
(4) உடல் வெப்பநிலை சீராக இருத்தல்
(5) சிறுநீரக தொழிற்பாடு குறைதல்

18) ஒருவர் தமது பிரதான வேளை உணவுக்காக உட்கொள்ளும் உணவின் அளவைக் குறிப்பது.
(1) உணவுப்பிரமிட்டு (2) உணவுப்பாகம் (3) பரிமாறல் அளவு
(4) உணவுத்தட்டு (5) உணவுப்பட்டோலை

19) உணவுக் கூம்பின் அடிப்படையில் காய்கறி உட்கொள்ளும் பரிமாறல் அளவு.
(1) 3 - 5 (2) 2 - 4 (3) 1 - 2 (4) 6 – 7 (5) 4 – 5

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

20) சாதாரணமாக ஆரோக்கியமான ஒருவரது குருதியமுக்கம்.
(1) 90/100 mm Hg (2) 100/50 mm Hg (3) 120/80 mm Hg
(4) 80/80 mm Hg (5) 150/120 mm Hg

21) தனின் (கபேன்) அடங்கிய தேநீர், கோப்பி அருந்துவதால் அகத்துறிஞ்சல் தடைப்படும் கனியுப்பு.
(1) கந்தகம், இரும்பு
(2) மக்னீசியம், பொற்றாசியம்
(3) நாகம், செலனியம்
(4) சோடியம், பொற்றாசியம்
(5) கல்சியம், இருப்பு

22) உணவு நஞ்சாதலின் அறிகுறி **அல்லாதது,**
(1) தலையிடி (2) வயிற்றுநோ (3) வாந்தி (4) காய்ச்சல் (5) தசைப்பிடிப்பு

23) எல்லாப் பருவத்தினரும் நாளொன்றுக்கு பருக வேண்டிய நீரின் அளவு.
(1) 3 குவளை (2) 6 – 8 குவளை (3) 4 – 5 குவளை
(4) 2 குவளை (5) 10 குவளை

24) மிகைக் கொழுமையான நபரின் உடற்திணிவுச் சுட்டி.
(1) 18.5 (2) 20 (3) 25 (4) 32 (5) 16

25) மாட்டிறைச்சியில் காணப்படும் பற்றீரியா.
(1) சூடோமோனஸ் (2) ஈகொலி (3) சல்மொனெல்லா
(4) லக்டோகொக்கஸ் (5) மதுவம்

26) ஆரம்ப காலத்தில் ஆடை உற்பத்தியில் முன்னிலை வகித்த நாடு.
(1) இலங்கை (2) இத்தாலி (3) சீனா (4) பிரான்ஸ் (5) யப்பான்

27) ஆடைத்தொழிற்சாலையில், துணியை நிலைக்குத்தாக வெட்ட பயன்படும் உபகரணம்.
(1) நேரிய அலகு (2) வட்டவடிவ அலகு (3) நாடா அலகு
(4) நீர்த்தாரை (5) லேசர் முறை

28) உள்ளாடை, குளியலுடை, விளையாட்டுடையில் உட்பக்கம் தைக்கும் வணிகத் தையல்.
(1) கைத்தையல்
(2) ஓவர்லொக்தையல்
(3) சங்கிலித் தையல்
(4) இடைப்பூட்டு எந்திரத்தையல்
(5) மறைப்புத்தையல்

29) செயற்கையான பல்பகுதிய நார்.
(1) பருத்தி (2) ஓலோன் (3) லினன் (4) தங்கம் (5) அரமிட்டு

30) உருவரை தகட்டு அச்சிடல் முறை துணியில் பதிக்கும் முறையை அறிமுகம் செய்தவர்கள்.
(1) பிரான்சியர் (2) ஜேர்மனியர் (3) சீனர் (4) யப்பானியர் (5) இந்தியர்

(30 x 1 = 30 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01)

(1) பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதன், தாம் வாழ்ந்த சூழலை தமக்கு சௌகரியமாக மாற்றினான். இதற்கு முதற்படியாக அமைந்த செயற்பாடு எவை?

(2) கட்டட நிர்மாணிப்பில், தரத்தின் உச்ச நியமங்களுக்கு அமைய நிர்மாணித்தல் என்பதில் அடங்குபவை?

(3) மிகையூட்டம் காரணமாக உடலில் தோன்றும் நிலைமைகள் எவை?

(4) சோர்வாதத்தின் அறிகுறி எவை?

(5) புரதத்தின் இயல்பு கெடுதல் என்றால் என்ன?

(6) உணவு நஞ்சடையும் அடிப்படை முறைகள் எவை?

(7) மிளகாய், இஞ்சி ஆகியவற்றின் காரத்தன்மைக்கு காரணமானவை?

(8) ஆடை உற்பத்தி தொழிற்சாலையில் ஆடை தைத்து முடிப்பு செய்யும் முறை 2 தருக.

(9) சூரிய ஒளியின் கழியூதாக்கதிர் காரணமாக விரைவில் சிதைவடையும் நார்கள் 2 தருக.

(10) பாய்நெசவு என்றால் என்ன?

02)(1) வாழ்க்கைச் சூழலை நிருமாணிப்பதன் முக்கியத்துவம் யாது?

(2) பௌதீக வாழ்க்கைச் சூழலில் மூன்று பகுதிகளும் எவை?

(3) பின்நவீனத்துவ கட்டட இயல்புகள் 4 தருக. (3+3+4=10 புள்ளிகள்)

03)(1) கொழுப்பின் தொழிற்பாடு 3 தருக.

(2) பாலில் அடங்கியுள்ள B12 ன் தொழிற்பாடு யாது?

(3) மீனில் அடங்கியுள்ள ஓமேகா – 3 கொழுப்பமிலத்தினால் தடுக்கப்படும் நோய்கள் எவை?

(3+3+4=10 புள்ளிகள்)

04)(1) உணவு வேளையைத் திட்டமிட அவசியமான மூலாதாரங்கள் 3 தருக.

(2) இதய நோய் ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணி எவை?

(3) இதய நோயாளிக்கு மதிய உணவைத் திட்டமிடுக. (3+3+4=10 புள்ளிகள்)

05)(1) சேர்மானங்கள் என்றால் என்ன?

(2) காபோவைதரேற்று உணவை நீருள்ள போதும், நீரின்றியும் சமைக்கும் போது ஏற்படும் தாக்கத்தை விளக்குக.

(3) கனலடுப்பை பயன்படுத்தி ஈற்றுணவு தயாரிக்கும் போது விசேடமாக பின்பற்ற வேண்டிய விடயங்கள் எவை? (3+3+4=10 புள்ளிகள்)

06)(1) மேசையொன்றின் மீது விரிப்பு விரிப்பதன் பயன் 3 தருக.

(2) வெளிற்றல் (Bleaching) என்றால் என்ன?

(3) பருத்தி நாரை எரிக்கும் போது வெளிப்படும் இயல்பை விபரிக்க.

(3+3+4=10 புள்ளிகள்)

07)பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(1) வீட்டில் உள்ளக அலங்கரிப்பில் சமநிலை பயன்படும் சந்தர்ப்பங்கள்.

(2) மலச்சிக்கல் நோயாளிக்கு உணவு திட்டமிடலில் அவசியம்.

(3) துணிமேற்பரப்பில் அலங்கார உரு இடுவதன் அவசியம்.

(2 x 5 = 10 புள்ளிகள்)